மங்கள வைபவங்களுக்கு
ஏற்ற பட்டுப் புடைவைகள்
மற்றும் சகல விதமான
ரெடிமேற் வகைகளுக்கு

ராசி சில்க்ஸ்



பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00



★ காஞ்சிபுரம்
★ ரெயின் போ பெனாரிஸ்
★ டபிள் கெற் பீஸ் பெனாரிஸ்
★ மைசூர் சில்க்ஸ்
★ காயத்திரி சில்க்ஸ்
★ பட்டு வேட்டிகள்
மற்றும் சகல விதமான
பட்டுப் புடைவைகளுக்கும்

ராசி பட்டு சோலை

70, 71A, சிறப்பு அங்காடி,
நவீன சந்தை, யாழ்ப்பாணம்



சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 23 வெள்ளிக்கிழமை (07 - 07 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 223


# என்ன விளைவு ஏற்பட்டாலும் புலிகளுக்கு ஆதரவு தருவோம்!

## கோபாலசாமி அறிவிப்பு

சென்னை, ஜூலை 7

விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவில் தடை செய்யப்பட்ட இயக்கமாக இருந்தாலும் அதனை நாம் முழுஅளவில் ஆதரிப்போம். விளைவுகள் அனைத்தையும் சிந்தித்து, சீர்தூக்கிப் பார்த்து, எதிர்கொண்டு சந்திப்பது என்ற முடிவோடு நாம் இந்தத் தீர்மானத்தை எடுத்திருக்கிறோம்.

— இவ்வாறு அறிவித்தார் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் வை. கோபாலசாமி.

புலிகளை ஆதரிப்பது என்று தமது கட்சியின் தேசிய மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

[4ஆம் பக்கம் பார்க்க]

### வாவியில் மர்ம சடலங்கள்:

## 'டபிள்கப்' வாகனத்தை தேடுகின்றனர் பொலீஸார்!

கொழும்பு, ஜூலை 7

பொல்கொட வாவியில் சடலங்கள் மீட்கப்பட்ட விவகாரம் தொடர்பாக ''டபிள்கப்'' வாகனம் ஒன்றை பொலீஸார் தேடி வருவதாக தெரிவிக்கப்பட்டது.

பொல்கொட வாவியில் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக அப்பகுதியில் நூறுக்கு மேற்பட்டவர்களை விசாரணை செய்த பொலீஸார் இது தொடர்பாக ''டபிள்கப்'' வாகனத்தை தேடிவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

### உடுத்துறைப் பகுதி கடலில் இருந்து

## குடியிருப்புப் பகுதிகள் மீது நேற்று கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்

### இளம் பெண் காயம்; வீடுகள் பல சேதமடைந்தன

தென்மராட்சி, ஜூலை 7

வடமராட்சி கிழக்கு உடுத்துறைக் கடலில் நேற்றுக் காலை 7 மணியளவில் ரோந்தில் ஈடுபட்ட 5 பீரங்கிப் படகுகளில் இருந்து குடியிருப்புப் பகுதிகள் மீது பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டது.

கண்மூடித்தனமாக நடத்தப்பட்ட இத் தாக்குதல்களின் போது இளம் பெண் ஒருவர் காயமடைந்தார். வீடுகள் பல சேதமடைந்தன.

சுமார் ஒரு மணி நேரம் தாக்குதல் நடந்தது. மக்கள் பாதுகாப்பான இடங்களை நாடி ஒதுங்கியிருந்ததால் சேதங்கள் தவிர்க்கப்பட்டன.

வத்திராயன், உடுத்துறைப் பகுதிகளில் பீரங்கிக் குண்டுகள் அடுத்தடுத்து விழுந்து வெடித்தன.

பீரங்கித் தாக்குதல் நடந்த சமயம் வெற்றிலைக்கேணி முகாமில் இருந்து ஷெல் வீச்சும் நடத்தப்பட்டது.

வத்திராயனைச் சேர்ந்த வேலாயுதமூர்த்தி உதயரஞ்சினி (24 வயது) என்ற பெண்ணே நேற்றைய சம்பவத்தில் காயமடைந்தவர் ஆவார்.

இவர் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். (ஒ-117-15)

## மணலாறு காட்டில் கடும் மோதல்; எட்டுப் போராளிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 7

மணலாறு காட்டுப் பகுதியில் நேற்று இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் மூண்டது.

இம்மோதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் மணலாறு கோட்ட சிறப்புப் பொறுப்பாளர் உட்பட எட்டுப் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

இராணுவத் தரப்பில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், மற்றும் மூவர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்ற போதும், உண்மையான விவரம் கிடைக்கவில்லை என ''புலிகளின் குரல்'' அறிவித்தது.

வீரச்சாவு அடைந்த போராளிகளின் விவரம் வருமாறு:-

மணலாறு கோட்ட சிறப்புப் பொறுப்பாளர் மேஜர் பரமதேவன் அல்லது பரமதேவா (அன்னப்பராஜா ஜஸ்டின் துரை - மன்னார்), லெப்டினன்ட் செந்தாளன் அல்லது

(4 ஆம் பக்கம் பார்க்க)

### ஏவுகணைகளுக்கு தாக்குப் பிடிக்கக் கூடிய

## 4 நவீன விமானங்கள் இவ்வாரம் விமானப்படைக்கு வருகின்றன!

கொழும்பு, ஜூலை 7

ஸ்ரீலங்கா விமானப்படையினரால் கொள்வனவு செய்யப்பட்ட நவீனரக தாக்குதல் விமானங்களில் 3 அல்லது 4 இவ்வாரத்திற்குள் கிடைக்கவுள்ளன என விமானப் படைத் தகவல்களை மேற்கோள்காட்டி ''லங்காதீப'' செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் ஏவுகணைகள் மற்றும் விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளுக்குத் தாக்குப் பிடிக்கக்கூடிய இந்தத் தாக்குதல் விமானங்களில் உலகில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மிக நவீன கருவிகள் பொருத்தப்பட்டுள்ளனவாம்.

இதற்கிடையில் ஸ்ரீலங்கா அரசு சீனாவிடமிருந்து கொள்வனவு செய்துள்ள தாக்குதல் கடற்படைக் கலங்கள் மிக விரைவில் வந்து சேரவுள்ளன என கடற்படைத் தகவல்கள் தெரிவிக்கின்றனவாம்.

புலிகளால் முன்னர் தகர்க்கப்பட்ட சீனத் தயாரிப்பான

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ரூபவாஹினிக்கு வந்த பார்சலால் பதற்றம்

கொழும்பு, ஜூலை 7

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்கு அனுப்பப்பட்ட பார்சல் ஒன்றால் அங்குபெரும் பதற்றம் நிலவியது.

நேற்று முன்தினம் ஒரு மணியளவில் அநாமதேய பார்சல் ஒன்று ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் உள்ளே இருக்கும் 'கன்ரீனுக்கு' அனுப்பப்பட்டதாகவும்—

இதனால் பதற்றம் ஏற்பட்டு பொலீஸார் அழைக்கப்பட்டதாகவும்—

அந்தப் பார்சல் சோதனையிடப்பட்ட சமயம், பெட்டி ஒன்றில் 30 சாப்பாட்டு பார்சல்கள் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டதாகவும்—தெரிவிக்கப்பட்டது.

பலத்த பாதுகாப்பு இருக்கும்போது எப்படி, யாரால் இந்தப் பெட்டி அனுப்பப்பட்டது என்பது குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

தற்போது பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ-3)

## யாழ். சுகாதார வசதிகள் மிக மோசமான நிலையில்

### செஞ்சிலுவைச் சங்க அறிக்கையில் தெரிவிப்பு

யாழ்ப்பாணத்தில் சுகாதார வசதிகள் மிகவும் குன்றிய நிலையில் இருந்து வருகின்றன. மோதல்கள் மீண்டும் தொடங்கிய பின்னர் மருந்து வகைகள் மீதான தடை திரும்பவும் விதிக்கப்பட்டுள்ளது. மருந்துக் கையிருப்பும் துரிதமாகக் குறைந்துள்ளது.

ஜெனிவாவில் உள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு விடுத்த அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்ணிவெடிகளை அகற்றுவது சம்பந்தமான மூன்று நாள் ஐ நா மாநாடு நேற்று முன்தினம் 5ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமானது.

செஞ்சிலுவை சர்வதேசக் குழுத்தலைவர் கொர்னேலியோசொம்மறாகா நேற்று இந்த மாநாட்டில் உரை நிகழ்த்த இருந்தார்.

இது தொடர்பாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கொழும்பு அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல் தவிர்ப்பு முடிவடைந்து முதலான இரண்டு மாதங்களுக்கு மேலான காலத்தில் ராணுவ நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. அதனால் மனிதாபிமான தேவைகளும் கூடி உள்

[3 ஆம் பக்கம் பார்க்க]

### குருநாகல் அளவ்வ பகுதியில்

## வயல்வெளியில் கிடந்த இரு பெண்களின் சடலங்கள்

கொழும்பு, ஜூலை 7

குருநாகல் பகுதியில் உள்ள நாரம்மலவில் வயல்வெளியில் பெண்களின் இரு சடலங்கள் கிடக்கக்கண்டுபிடிக்கப்பட்டன.

எங்கிருந்தோ கடத்தி வரப்பட்ட இந்தப் பெண்கள் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு கண்கள் கட்டப்பட்ட நிலையில் வயல்வெளியில் போடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குருநாகல் மாவட்டத்தில் அளவ்வ பகுதியில் ஏற்கனவே ஐந்து வாலிபர்களின் சடலங்கள் இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது தெரிந்ததே. [ஒ-ஐ]

## வெற்றிலைக்கேணி கடலில் இரு கப்பல்கள் நங்கூரம்

தென்மராட்சி, ஜூலை 7

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி முகாமையண்டிய கடலில் நேற்று அதிகாலை முதல் இரு பாரிய போர்க்கப்பல்கள் நங்கூரமிட்டுள்ளன.

இக் கப்பல்களுக்குப் பாதுகாப்பாக ஐந்து பீரங்கிப் படகுகள் ரோந்து சேவையில் ஈடுபட்டுள்ளன.

அதிகாலையிலேயே பீரங்கிப் படகுகள் கடலில் காணப்பட்டதால் தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் அவசர அவசரமாக கரை திரும்பினர். (ஒ-117)

## ஊழல் விவகாரத்தில் சிக்கினார் ஹமீத்?

கொழும்பு, ஜூலை 7

ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருட ஆட்சிக் காலத்தின் போது தென்கொரிய அரசினால் வழங்கப்பட்ட பெரும் தொகையான நிதி உதவி, மர்மமான முறையில் லண்டன் வங்கிக் கணக்கு ஒன்றுக்கு மாற்றப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக—

ஐ. தே. கவின் முக்கிய அமைச்சர்களில் ஒருவரான ஏ. ஸி. எஸ். ஹமீதை அழைத்து விசாரிப்பது என லஞ்சம், ஊழல் தொடர்பான நிரந்தர ஆணைக்குழு தீர்மானித்திருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

அடுத்து வரும் வாரங்களில் ஆணைக்குழு முன் ஹமீத் நிற்க வேண்டிவரும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## குறைபாடுகள் குறித்து தனக்கு முறைப்பாடு இல்லை என்கிறார் பௌசி

லண்டன், ஜூலை 7

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மருந்து தட்டுப்பாடு நிலவுவதாகவோ அங்கு வைத்திய வசதிகள் குறைவாக இருப்பதாகவோ எனக்கு இதுவரை எவ்வித முறைப்பாடும் கிடைக்கவில்லை.

இவ்வாறு சுகாதார அமைச்சர் ஏ எச். எம். பௌசி பி. பி. ஸிக்கு நேற்றிரவு தெரிவித்தார்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட தகவல்கள் குறித்து பி. பி. ஸி கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் பௌசி இவ்வாறு சொன்னார்.

பௌசியைப் பேட்டி காண்பதற்கு முன்னர் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவ விசாரணைக்குழு மண்டைதீவு சென்றது

கொழும்பு, ஜூலை 7

இராணுவத்துக்கு மண்டைதீவில் ஏற்பட்ட தோல்வி குறித்து விசாரணை செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட மேஜர் ஜெனரல் ஏ எம். யூ. செனவிரத்னா தலைமையிலான ராணுவ அதிகாரிகள் குழு கடந்த திங்கட்கிழமை மண்டைதீவுக்குவிஜயம் செய்தது.

விடுதலைப் புலிகள் சம்பவ தினம் எப்படி மண்டைதீவுக்குள் ஊடுருவினர் என்பது குறித்தும் இந்தக் குழுவினர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் பற்றிய வீடியோ வைத்திருந்த இருவர் கைது

கொழும்பு, ஜூலை 7

விடுதலைப் புலிகள் தொடர்பான வீடியோ நாடாக்களை வைத்திருந்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் மலையகத் தமிழர்கள் இருவரை ஹட்டன் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் இ.தொ.கா தொழிலாளர் ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளரான மோகன் சுப்பிரமணியம் என்றும் —

மற்றவர் நுவரெலியாவைச் சேர்ந்த லட்சுமணன் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அளவ்வ வாவியில் மீட்கப்பட்ட சடலங்களில் ஒன்று தமிழருடையது

### மாமியார் அடையாளம் காட்டினார்

கொழும்பு, ஜூலை 7

அளவ்வப்பகுதியில் வாவியில் மிதக்கக் கண்டு பிடிக்கப்பட்ட ஐந்து மர்மச் சடலங்களில் ஒன்று அடையாளம் காணப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

இச்சடலம் நரேஷ் இராஜதுரை (வயது 27) என்ற தமிழ் இளைஞருடையது என அவரின் மாமியார் அடையாளம் காட்டியிருக்கிறார்.

அளவ்வ மற்றும் பொல்கொட வாவிகளில் மொத்தம் பதினாறு சடலங்கள் — உருக்குலைந்த நிலையில் — அண்மையில் — சிலவார காலத்துக்குள் — கண்டு பிடிக்கப்பட்டமை தெற்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது தெரிந்ததே.

இச்சடலங்களை பிரேத பரிசோதனை செய்தசட்ட வைத்திய அதிகாரிகள் —

''இந்த நபர்கள் பட்டினி போடப்பட்ட பின்னர், கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் நீரில் அமிழ்த்திக் கொல்லப்பட்டிருக்க வேண்டும். —

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றில் கேட்ட வேட்டு

கொழும்பு, ஜூலை 7

நாடாளுமன்றத்துக்குள் எம். பிக்கள் உட்செல்லும் நுழைவாயிலில் நேற்று முன்தினம் காலை திடீரென துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டது.

எதிர்க்கட்சி எம்.பி. ஒருவரின் மெய்ப்பாதுகாவலரின் துப்பாக்கியிலிருந்தே வேட்டுத்தீர்ந்ததாக பின்னர் தெரியவந்தது. (ஒ-3)

## யாழ். ஆஸ்பத்திரி டாக்டர்கள் இருவர் கொழும்பில் கைது செய்யப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ் போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் இரு டாக்டர்கள் கொழும்பில் வைத்து இரண்டொரு தினங்களுக்கு முன் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பதவி உயர்வுப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக கொழும்பு சென்றிருந்த டாக்டர்களான எஸ். ஜேசுதாசன், எஸ். பிரபாகரன் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர். இவர்களில் ஒருவர் பரீட்சை எழுதி விட்டு வரும் போதும், மற்றையவர் பரீட்சை எழுத முன்பும் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் —

கொழும்பு பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை வைத்திய முதுமாணி பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் அங்கு வந்த 20 பொலீஸார்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கடைக்குரிய கண்ணாடி அலுமாரி, சோக்கேஸ், இரும்பு கிறாக்கைகள் விற்பனைக்குண்டு. சிறிமுருகன், இல. 303, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (37359)

சுப்பர் கப் 50 (பான்சிபுளு) விற்பனைக்குண்டு. தொடர்பு: காலை 6-00—7-30, மாலை 4-30—7-30. க. வேலாயுதநாதன், இல. 6, நாவலர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (37374)

சாத்திரமான இரும்புக் கம்பிகள் பதித்த யன்னல்கள் ஐந்து விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சண்முகராஜா, சூராவத்தை, சந்தோலிக்க மாதா கோயில் முன்பாக சுன்னாகம். (8807)

பொருளியல் A/L உயர் கல்வியின் கடந்த கால வினா விடை புத்தகம் விற்பனையாகிறது. விலை 80/-. "அறிவகம்", 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி 1720)

### வீடு தேவை

உயர்கல்வி பயிலுகின்ற மாணவனும் அவரது தாயாரும் வசிப்பதற்கு யாழ்ப்பாணம், நல்லூர் அல்லது K K S. வீதியில் எவ்விடத்திலாயினும் வீடு தனியாகவோ, பகுதி வீடாகவோ ஒரு வருடத்திற்கு வாடகைக்கு தேவை. தொடர்புகொள்ளவும். க. இராசமலர், மே/பா பூ. சதாசிவரத்தினம், டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். (37373)

### துர்க்கா திருமண சேவை

எல்லா மதத்தவர்களுக்கும் சகல தொழில்களிலும் மணமகன், மணமகள் உண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: 'வளர்மதி இல்லம்', கே. கே. எஸ். றோட், மல்லாகம். (8805)

### இலகு திருமண சேவை

32 வயது, செவ்வாய் 1 UK யில் Computer Net work Engineer நிரந்தர வதிவாளருக்கு படித்த, அழகிய மணப்பெண் தேவை. சகல மணமக்கள் தேவைகளுக்கு நாடுங்கள் விமலா யாழ் நாச்சிமார் கோவிலடி. (37372)

### மாணவர் பதிவு

க. பொ. த உயர்தரப் பரீட்சையில் இரண்டு திறமைச் சித்திகளுடையோர், பட்டயக் கணக்காளர் நிறுவன தகுதிச் சான்றிதழ் 1996 ஜனவரி பரீட்சைக்குத் தோற்ற விரும்பின் 15-07-95 இற்கு முன் பதிவு செய்து கொள்ளலாம். இதற்கான விரிவுரைகள் இலவசமாக நடத்தப்படும். தொடர்பு:- 140, பலாலி வீதி, திருநெல்வேலி. [37375]

### தவறிவிட்டது

வேலாயுதன் இராசகுரியவின் 501382981 V இலக்க அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். "சிவகாமி வாசம்" சிவகாமி அம்மன் கோயிலடி, இணுவில் கிழக்கு. [37376]

### தேவை

அரேசன் வீதி கொக்குவிலில் உள்ள வீட்டில் வைத்து ஆண்டு 1, 3, 4, 6, 9 ஆகிய வகுப்பு மாணவர்களுக்கு கணிதம், தமிழ், ஆங்கிலம், சமயம், சுற்றாடல் ஆகிய பாடங்கள் புகட்டித்தரக் கூடிய ஆசிரியர்கள் தேவை. விபரங்களுக்கு: 15-7-95 இற்கு முன் "சோபனா ஆடை அகம்", 16, மேஜர் சோதியா தெரு, யாழ்ப்பாணம். (8620)

---

## 7 ஆம் ஆண்டு
## நினைவலைகள்

### அமரர் கஸ்பார் அன்ரன்

[பிரபல தொழிலதிபர், சுன்னாகம் அன்பன்ஸ் உரிமையாளர்]

பிறப்பு: 14 – 07 – 1950
இறப்பு: 07 – 07 – 1988

எமது இதயங்களில் நிலைத்து வாழும் தெய்வமே!
உமது நிழலும் பிரிந்து ஆண்டுகள் ஏழானதோ?
தமது உடலுழைப்பால் தானாது நாம் வாழ
கமழ்கின்ற சந்தனமாய் தேய்ந்ததை நாமறிவோம்!
சந்தனமாய் தேய்ந்து இளவயதில் போனதுமேன்?
தந்தை எமக்கில்லை என்ற குறை குடைகிறது!
சந்ததிக்கு சேர்த்து வைத்த பொருளெல்லாம் – உங்களைச்
சிந்தனையைச் சொல்வதானால் அவ்வழி – வாழ்கின்றோம்.

என்றும் உங்கள் இழப்பால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,

53, 3 ஆம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம். [சி-1603]

---

விராட் விஸ்வப் பிரமணே நம

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 15 – 09 – 1914
மறைவு: 18 – 06 – 1994

விஸ்வ குல திலகர்
### உயர்திரு சண்முகம் நடராசா
(பத்தர்)

திதி: 07 – 07 – 1995

வருடங்கள் எத்தனை கடந்தாலும் உங்களின் நினைவுகள் எம்மை விட்டு அகலாது தங்களின் ஆத்மா சாந்தியடைய வண்ணை ஸ்ரீ காமாஷி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

இல; 89A, காரைக் காட்டு வீதி,
வண் வடமேற்கு,
யாழ்ப்பாணம். (37365)

---

# பட்டம் வழங்கிக் கௌரவம்

சுமார் 40 வருட காலமாக வண்ணை
ஸ்ரீ விஸ்வலிங்கப்பிள்ளையார்
ஆலய கும்பாபிஷேகங்களையும், மஹோற்சவங்களையும்
வேதாகம விதிமுறையாகவும், பக்திபூர்வமாகவும்
வேதசிவாகமக் கிரியாபாகங்களைச்
சிறப்புறவும் ஆற்றிய தேவஸ்தான பிரதம குரு



பிரம்மஸ்ரீ
### நீ. சுப்ரம்மண்யக் குருக்கள்
அவர்களை
ஆலயப் பூங்காவன உற்சவ உபயகாரர்கள்
ஆகிய
இளம் தொண்டர்கள் பாராட்டுப் பட்டம் அளித்து,
தங்கப்பதக்கம் சூட்டி, பொன்னாடை போர்த்தி,
கௌரவித்து

## "ஆகம பூஷணம்"

என்னும் கௌரவ விருதை
மனமுவந்து வழங்கினர்

சிறப்புச் சொற்பொழிவு ஆற்றியவர்கள்

**க. மகாகணபதீஸ்வரக் குருக்கள்**
இல 18, துரைராசா வீதி,
வண்ணார்பண்ணை.

**ப. கோபாலகிருஷ்ண ஐயர்**
யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை
தலைவர்

**தமிழருவி த. சிவகுமாரன்**
அமைப்பாளர் காரைநகர் கம்பன் கழகம்,
ஆசிரியர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

### வாழ்த்துவோர்

**மலரும் மலர்கள் வீடியோ சேவை**
83, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.
மிக்சர் கமரா மூலம்
வீடியோ புகைப்படம் பிடிப்பவர்கள்

**விமலா களஞ்சியம்**
275, K. K. S. வீதி, யாழ்ப்பாணம்.

**முருகன் புடைவையகம்**
6, மேஜர் சோதியா தெரு.
(பெரியகடை)
யாழ்ப்பாணம்.

**கபிலா காலணியகம்**
4, சந்தோசம் தெரு,
யாழ்ப்பாணம்.

**ஈசன்ஸ் அந்தியகால சேவை**
148, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

**கணேசா களஞ்சியம்**
59, முருகமூர்த்தி வீதி யாழ்ப்பாணம்.
★ அன்பளிப்புப் பொருள்கள்
★ அழகுசாதனப் பொருள்கள்
★ எவர்சில்வர் பொருள்கள்
★ கேக் தயாரிக்கும் பொருள்கள்
விற்பனையாளர்.

**சுந்தர் பலசரக்கு வியாபாரம்**
கொக்குவில் மேற்கு, கேணியடி.

### வாழ்த்துவோர்

**மு. க. தருமலிங்கம் பலசரக்கு வியாபாரம்**
இல. 412,
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ சாயி அச்சகம்**
2/5, துரைராசா வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
சிறந்த முறையில் அச்சக வேலைகள்
செய்து கொடுக்கப்படும்.

பத்திரிகை முகவர்
**சிவன் ஸ்ரோர்ஸ் பல்பொருள் வாணிபம்**
சம்பஸ் சந்தி,
திருநெல்வேலி.

**★ சிவா திருத்தகம் ★**
1006, K K. S வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
மோட்டார் சைக்கிள், ரயர் ரீயூப்,
றிம் பக்கிள் பார்த்துக் கொடுக்கப்படும்

**ரவி அலங்காரப் பொருள்கள் விற்பனை நிலையம்**
53, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

**விக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ்**
4/3, முருகமூர்த்தி வீதி,
வண் - மே. யாழ்ப்பாணம்.
S. K K. தரமான
யானை மார்க் நல்லெண்ணெய்
தயாரிப்பாளர்களும்
விநியோகஸ்தர்களும்

[37368]

---

யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி
## வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி - 1995

காலம்: 07 - 07 - 1995 வெள்ளிக்கிழமை
பிற்பகல் 1 - 30 மணி

இடம்: கல்லூரி விளையாட்டு மைதானம்

தலைவர்: திரு ஆ. கமலநாதன் அவர்கள்
(அதிபர்)

பிரதம விருந்தினர்:
திரு. சி தியாகராஜா அவர்கள்
(உடற்கல்விப்பணிப்பாளர், யாழ். பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்கள்: செல்வி சர்வா அவர்கள்
(நீதியாளர், தமிழீழ மாவட்ட நீதிமன்று,சுன்னாகம்)

திரு. ந வித்தியாதரன் அவர்கள்
(செயலாளர், யாழ் மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம்)

பரிசில் வழங்குபவர்:
திருமதி ய. தியாகராஜா அவர்கள்
(இளைப்பாறிய அதிபர்,
யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி)

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்
மாணவர்.

கந்தரோடை,
சுன்னாகம்.

அன்பளிப்பு:
Dr. ந. கிருஷ்ணராசா
சுதேச வைத்தியசாலை,
சுன்னாகம்.

---

## நினைவஞ்சலி

35 ஆம் ஆண்டு | 5 ஆம் ஆண்டு



அமரர்
### நாகலிங்கம் திருஞானசம்பந்தர்
(முன்னைநாள் ஆசிரியர்,
மீசாலை வீரசிங்கம் சைவவித்தியசாலை)

தோற்றம்: 22 - 07 - 1913
மறைவு: 02 - 07 - 1960



திருமதி
### திருஞானசம்பந்தர் யோகாம்பிகை
(இளைப்பாறிய ஆசிரியை,
மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்)

தோற்றம்: 23 - 08 - 1920
மறைவு: 01 - 07 - 1990

**திதி: 06 - 07 - 1995**

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மீசாலை — குடும்பத்தினர்

(37390)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரையிலும், கடலிலும் வெற்றிகள் குவிய கரும்புலிகளின் அர்ப்பணிப்பே காரணம்

## நெல்லியடிக் கூட்டத்தில் சூசை

வடமராட்சி ஜூலை 7

கரும்புலிகளின் அர்ப்பணிப்பினால் விடுதலைப் போராட்டம் உத்வேகம் கண்டுள்ளது. தரையிலும், கடலிலும் நாம் அடுத்தடுத்து வெற்றிகளைக் குவித்து வருகிறோம்.

கடற் புலிகளின் சிறப்புத் தளபதி திரு. சூசை நேற்று முன்தினம் நெல்லியடியில் நடைபெற்ற கரும்புலிகள் நினைவு தினக்கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் பேசியதாவது:-

8 ஆண்டுகளுக்கு முன்...

எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் எங்களுடைய விடுதலைப் போராட்டம், குறிப்பாக சில நூறு உறுப்பினர்களை உள்ளடக்கியிருந்த வேளையில்—

வடமராட்சிப் பகுதியில் 120 உறுப்பினர்கள் மட்டும் இருந்த வேளையில் — 1987 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி வடமராட்சி மீது 'ஒப்பரேசன் லிபறேசன்' இராணுவ நடவடிக்கை நடத்தப்பட்டது.

அத் தாக்குதலில் 800க்கு மேற்பட்ட பொது மக்கள் கொன்றொழிக்கப்பட்டார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் வடமராட்சிப் பகுதியை விட்டு இடம் பெயர்ந்தார்கள். மக்களின் எதிர்பார்புகள் உடைந்தன. விடுதலைப் புலிகள் நிச்சயமாக எங்களைக் காப்பாற்றுவார்கள் என்ற எண்ண உணர்வில் இருந்த போதுதான் முதல் கரும்புலித் தாக்குதல் நடத்தப்பட்டது.

அந்த வேளையில் எங்களிடம் இருந்த ஒரே ஒரு படைதான் அவர்களை எதிர் கொண்டது.

இன்று பல துறைகளில் பலமான பல அணிகள் உருவாக்கப்பட்டு விட்டன.

எதிரிக்கு அச்சுறுத்தலைத் தருகின்ற அளவுக்கு ஒவ்வொரு துறையும் முறையாக உருவாக்கம் கண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

ஒபரேசன்லிபரேசன் தாக்குதலைத் தொடர்ந்து வடமராட்சியில் பல்வேறு நிலைகளில் இராணுவம் நிலை கொண்டுள்ளதாக அரச பறைசாற்றியது.

அவ் வேளையில் இவ் வித்தியாலயத்திலிருந்த இராணுவ முகாமை வெடிகுண்டை நிரப்பிவந்து கப்டன் மில்லர் நிர்மூலமாக்கினான்.

தனி ஒருவனாக—

கரும்புலியாக— வந்து கப்டன் மில்லர் புதிய வரலாற்றைப் படைத்தான்.

மில்லரைத் தொடர்ந்து இதுவரை 43 கரும்புலிகள் வரலாறுகளைப் படைத்துள்ளார்கள்.

இதே போன்று கடற்பரப்பை பொறுத்தவரை ஸ்ரீலங்காவின் கடற்படைக் கலங்கள் வடமராட்சி ஒபரேசன் லிபரேசனின் போது அதன் வெற்றிக்காகத் துணை நிற்கின்றன.

அவ் வெற்றிக்காக துணை நின்ற —

அவ்வெற்றியில் விருது பெற்ற கற்பிட்டி கடற் பரப்பில் கடற்கரும்புலிகளால் நிர்மூலமாக்கப்பட்ட சாகர வர்த்தனா கப்பலின் தளபதி எங்களால் சிறைபிடிக்கப்பட்டுள்ளார்.

### கடற்கரும்புலிகள் சாதனை

ஸ்ரீலங்கா கடற்படைப் படகுகள் கப்பல்கள் எங்களையும், மக்களையும் தாக்கினார்கள் அதில் ஒரு கப்பலை கப்டன் கொலின்ஸ், வினோத், காந்தருபன் ஆகியோர் 1990 ஆம் ஆண்டில் சிறிய படகு ஒன்றில் வெடிமருந்துடன் சென்று மோதி அக்கப்பலுக்குச் சேதம் விளைவித்தார்கள்.

1992 இல் சிதம்பரம், ஜெயந்தன் வெடிமருந்துகளை ஏற்றிச் சென்று அடுத்த கட்டளைக் கப்பலைத் தாக்கினார்கள். அது பலத்த சேதமடைந்தது.

ஐந்து கடற்கரும்புலிகள் இவ்வாண்டில் தமிழ் ஈழக் கடற்பரப்பில் கப்பல்களை சிதறடித்து சாதனை படைத்துள்ளார்கள்.

நீருக்குக் கீழாக வெடி குண்டை சுமந்து கொண்டு தாக்குகின்ற புதிய வடிவத்தை தலைவர் ஏற்படுத்தித் தந்துள்ளார்.

திருமலைக் கப்பல் தகர்ப்பின் மூலம் மூன்றாம் கட்ட ஈழப் போர் பரிணாமம் பெற்றது.

இன்று வடக்கிலும் கிழக்கிலும் கடலிலும்—தரையிலும் அடுத்தடுத்து பல வெற்றிகள் குவிக்கப்படுகின்றன.

அண்மையில் மண்டைதீவு இராணுவ முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலை குறிப்பிட்ட இரண்டு மணித்தியாலத்துக்குள் நூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தைக் கொன்று 10 கோடி ரூபாய் பெறுமதியான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

ஆனால் எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் இப்பகுதியில் குறிப்பாக வடமராட்சிப் பகுதியில் 120 உறுப்பினர்களை உள்ளடக்கி முழுமையாக 80 ஆயுதங்களை எங்கள் கைகள் சுமந்திருந்த விடுதலைப் போராட்டம், இன்று பரவலாக எல்லா இடங்களிலும் புதிய புதிய துறைகளில் புதிய புதியபரிணாம வளர்ச்சியோடு விரிவாக்கம் கண்டுள்ளது.

இன்று தமிழ் ஈழத்தை விரைவாக எட்டிப்பிடிக்கக் கூடிய சூழ்நிலைக்கு எமது போராட்டம் தள்ளப்பட்டிருக்கிறது என்று சொன்னால் காலத்துக்குக் காலம் மிகவும் நெருக்கடியான சூழ்நிலையில் ஒவ்வொரு வெற்றிக்காகவும், கரும்புலிகளின் தியாகமே காரணம் ஆகும் பூநகரி வெற்றிக்காக 13 கரும்புலிகளும்—

மிகவும் பலமான பலாலி இராணுவத் தளத்துக்குள் ஊடுருவி அங்கு நின்ற ஹெலியை உடைத்தெறிந்து 6 கரும்புலிகளும் — வரலாற்றைப் படைத்ததினால் தான் இன்று விடுதலைப் போராட்டம் இவ்வளவு தூரத்துக்கு வளர்ச்சி கண்டுள்ளது.

இத்தாக்குதல்கள் போராட்டத்தின் விரைவான போக்குக்கு — விரைவான வளர்ச்சிக்கு — படிக்கற்களாக 43 கரும்புலிகளும் வரலாறு படைத்தார்கள்.

43 கரும்புலிகளுக்கு பக்க பலமாக 6 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாவீரர்கள் உரம் சேர்த்த படியால்தான் விடுதலைப் போராட்டம் இவ்வளவு தூரத்துக்கு வளர்ச்சி அடைந்துள்ளது.

விடுதலைப் போராட்டத்தில் கரும்புலிகள், மிகவும் பலமான பாதுகாப்பான எந்த ஓர் இடத்திலும் ஊடுருவிச் சென்று எந்தத் தாக்குதலையும் வெற்றிகரமாக செய்ய முடியும் என்பதை அடுத்தடுத்து நிரூபித்துக் காட்டியுள்ளார்கள்.

விடுதலைப் போராட்டத்தை விரைவுபடுத்துவதற்காக இந்தக் கரும்புலிகள் இறுதி நேரம் குறித்து தமது இன்னுயிரை மண்ணுக்கு வழங்கினார்கள்.

### கடற்படைக் கப்பல்கள் கூட்டு ரோந்து

மூன்றாம் கட்டப் போரினைத் தொடர்ந்து ஸ்ரீலங்கா கடற்படைகளின் கலங்கள் கூட்டு ரோந்தாக உலாவருகின்றன.

காங்கேசன்துறை, வெற்றிலைக் கேணி, திருகோணமலை ஆகிய இடங்களுக்கு கடல் விநியோகங்களை 4 டோறாக்கள் 2 தரையிறங்கு கப்பல்கள் கூட்டாக மேற்கொண்டு வருகின்றன.

சிலவேளைகளில் 1983 முதல் 1986வரை நாங்கள் தெரிவிலாத் தாக்குதல்களை மேற்கொள்வதாக கூறிய ஸ்ரீலங்கா அரசு அதேமாதிரியான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கடல் வான் பரப்புகளில் திடீரென பல ஆயிரம் அடி உயரத்தில் விமானங்கள் தோன்றுகின்றன. அவை இலக்குகளை குறி பார்க்க முடியாத அளவுக்கு மிக வேகமாக குண்டுகளை வீசிவிட்டு விரைந்து செல்கின்றன.

1983 காலப்பகுதியில் எமது போராட்டத்தை முனைப்புப் படுத்துவதற்காக நாம் ஆங்காங்கே மேற்கொண்ட தாக்குதல்கள் போன்றுதான் இன்று அரசபடைகள் கடற்பரப்பிலும் சரி வான் பரப்பாலும் சரி தெரிவிலாப் பாணி தாக்குதல்களைத்தான் மக்கள் குடியிருப்புப் பகுதிகள் மீது நடத்துகின்றன.

இப்படி அவர் கூறினார்.

(இ-173-118)

## உதயன்

292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

### இன்றே செய்திட வேண்டும்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நாம் மீட்கும் பிரதேசம் விரிவடைகின்றது அதற்கு ஏற்றவாறு எமது பலத்தையும் நாம் அதிகரிக்க வேண்டும். இல்லையேல் மீட்கப்பட்ட பிரதேசத்தை நாம் இழக்க வேண்டி வரும்.

நெல்லியடியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கரும்புலிகள் விழாவில் பேசிய தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. க. கரிகாலன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு இனிமேல் சமாதானப் பேச்சு மூலம் தீர்வு காண முடியாத நிலையை அரசு தோற்றுவித்துள்ளதால் —

தமிழர்கள் தமது விடுதலைக்காக இராணுவ வழியில் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை — என்பதனைத் திரு. கரிகாலன் தமது பேச்சில் விவரமாக எடுத்துரைத்துள்ளார்.

கிழக்கு நிலைமையையும் அவர் தொட்டுக் காட்டியிருக்கிறார். மூன்றாம் ஈழப் போர் தொடங்கிய பின்னர், விடுதலைப் புலிகள் கிழக்கிலும் பல பிரதேசங்களைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விட்டனர் என்றும் —

யாழ்ப்பாணத்தைப் போன்று கிழக்கிலும் விடுதலைப் புலிகளால் நிர்வாகத்தை நடத்த முடியும் என்றும் — அங்குள்ள தள நிலைமை குறித்துத் தகவல் வெளியிட்டிருக்கிறார்.

வடக்கில் விடுதலைப் புலிகளின் ஆட்சி நடைபெறுகிறது. இதனை சர்வதேச மட்டத்தில் இன்னும் எந்த நாடும் அங்கீகரிக்கவில்லையெனினும் —

சிறிலங்காவின் தொண்டர் அமைப்புகளின் நிறைவேற்றுச் செயலாளர் கிறென் லூக் போன்றோர் வெளிப்படையாகக் கூறி வருகின்றார்கள் — உண்மை நிலை அது என்பதால்.

கிழக்கிலும் தமிழர் ஆட்சி அமைக்கக் கூடிய ஒரு நிலைமை உருவாகுமெனின் தமிழர்கள் தமது பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு — தங்கள் அரசியல் அபிலாசைகளை எய்துவதற்கு — சிங்கள அரசுகளின் அரசியல் தீர்வுக்குக் காத்திருக்கும் அவசியம் இல்லை.

இத்தகைய ஒரு நிலைமையை அடைவதற்கு தமிழர் தரப்பின் படை பலம் மேலும் அதிகரிக்கப்பட வேண்டியது கட்டாய தேவையாகிறது.

ஜனநாயக வழியில், அரசியல் வழியில், சமாதான முறையில் தமிழர்களின் பிரச்சினையை நிறைவாக நியாயமாகத் தீர்த்து வைக்க சிங்கள அரசுகள் எப்போதும் தயாராக இருந்ததில்லை; இப்போதும் அதற்குத் தயாரில்லை.

ஆகையால் ஆயுதப் போராட்டத்தின் மூலமே தமிழர்கள் தங்கள் அரசியல் உரிமைகளை நிலைநாட்ட வேண்டிய, உறுதிப்படுத்த வேண்டிய கட்டாய நிலை திணிக்கப்பட்டுள்ளது. சிங்கள அரசாங்கங்களே இந்த நிலையைத் தோற்றுவித்தன என்பது தென்னிலங்கையிலேயே பலராலும் ஏற்கப்பட்ட ஒன்றாகும்.

இப்போது நடக்கும் மூன்றாவது ஈழப்போர் இறுதிப் போராக அமைந்து, அதில் தமிழர்கள் வெல்ல வேண்டும். இதில் நாம் வீழ்ச்சி கண்டால் இப்போது அடைந்துள்ள உச்ச நிலையை எய்த மீண்டும் பல வருடங்கள்— மிக நீண்டகாலம்—பிடிக்கும்.

காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டும். இப்போது எட்டியுள்ள உச்ச நிலையை — ஸ்ரீலங்கா படைகளை பல வகைகளாலும் முடக்கியும், அச்சுறுத்தியும் வைத்திருக்கும் நிலையை— உறுதிப்படுத்தி மேலும் படைப் பலத்தை அதிகரித்தால்வெற்றி நமதே.

இத்தனை அழிவுகள் இழப்புக்களின் பின்னர் கீழ் நோக்கிச் செல்வது பேரிழப்பாகிவிடும். ஆகையால் ஸ்ரீலங்கா அரசுக்குப் போட்டியாக படைப்பலத்தைவளர்க்க தமிழர்கள் ஒவ்வொருவரும் தமது பங்களிப்பை மனமுவந்து நல்க வேண்டும். இன்று செய்வதை இன்றைக்கே செய்துவிட வேண்டும். நாளைக்கு என்று ஒத்தி போடக் கூடாது.

## வலிமேற்கு பிரதேச செயலக போஷாக்குவார நிகழ்வுகள்

வலி மேற்கு சங்கானை பிரதேச செயலர் பிரிவு போஷாக்கு சுகாதாரக் கண்காட்சியும் இறுதிநாள் விழாவும் முறையே நாளை 8 ஆம் திகதி சனிக்கிழமையும் நாளை மறுதினம் 9 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையும் சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெறும்.

கண்காட்சி நாளை காலை 8-30 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும். வைத்தியகலாநிதி என் சிவானந்தன் கண்காட்சியைத் திறந்து வைப்பார்.

சங்கானைப் பிரதேச செயலாளரும் மேலதிக அரசாங்க அதிபருமான திரு. கா. சந்திரராசா தலைமையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் இறுதி நாள் நிகழ்வுகள் பிற்பகல் 2 மணி முதல் ஆரம்பமாகும்.

யாழ். மாவட்ட மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸ்ரீகாந்தா பிரதம விருந்தினராக இந் நிகழ்வில் கலந்து கொள்வார்.

வைத்திய கலாநிதி க. சிவபாலன், சுகாதார கல்விப் போதனாசிரியர் திரு. க. வைத்தீஸ்வரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்குவார்கள். (க-28-161)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் பல்வேறு விளையாட்டுக்களுக்கான சுற்றுப் போட்டிகளில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

இணுவில் சந்தை மைதானத்தில் நடைபெறும் ஆண்களுக்கான தாச்சிச் சுற்றுப் போட்டியில்—

★ 3 30 மணி:- மயிலிட்டி ஒற்றுமை அணி எதிர் சுன்னாகம் கலைவாணி அணி/ கைதடி குமர்நகர் அணி

★ 4 30 மணி:- மயிலிட்டி பூமகள் அணி எதிர் கைதடி வளர்மதி அணி.

தென்மராட்சி வலய அணிகளுக்கு இடையில் சாவகச்சேரி நகரசபை பொது மைதானத்தில் நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் கால் இறுதியாட்டங்களில்

★ 3 00 மணி:- நாவற்குழி வி. க. அணி எதிர் நாவற்குழி பீக்லூட் அணி.

★ 4.00 மணி:- மிருசுவில் புனித நிக்கொலஸ் வி. க. அணி எதிர் சாவகச்சேரி ஸ்ரீதாஸ் வி. க. அணி.

★ வடமராட்சிவலய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று மாலை 4 00 மணிக்கு நெல்லியடி ம. ம. வி மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் சுடர் ஒளி அணி எதிர் என். சி. சி. அணி.

வலி கிழக்கு வலய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பாஷையூர் சென். அன்ரனிஸ் வி. க. மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில்—

★ 4.00 மணி:- பல்கலைக் கழகம் எதிர் சரஸ்வதி.

★ 5.00 மணி:- சென். அன்ரனிஸ் எதிர் சென். றோக்ஸ்.

★ ★ ★

உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் யங் றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3.30 மணி:- கிநாயகர் எதிர் சென். நிக்கிலஸ்.

★ 4 30 மணி:- ஞானமுருகன் எதிர் பல்கலைக்கழகம்.

★ ★ ★

யாழ். பிரதேச செயலர் பிரிவு பெண்கள் அணிகளுக்கு இடையில் விளையாட்டுத் துறை அமைச்சு நடத்தும் ''எல்லே'' சுற்றுப்போட்டி நாளை காலை 8.30 மணி முதல் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும்.

★ ★ ★

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான 20 ஓவர்கள் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மட்டுவில் மகா வித்தியாலய மைதானத்தில் இன்று பிற்பகல் நடைபெறும் அரை இறுதிப் போட்டியில் மட்டுவில் ம. வி. அணியை எதிர்த்து சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அணிமோதும்.

## இந்தியா தலையிடாது

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை கைது செய்து நாடுகடத்தும் விடயத்தில் இந்தியா தலையிடாது என்று இந்திய [illegible] அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார். [illegible]

## ஆலயங்களில்

மீசாலை அல்லாரை —பண்டாரி வெளி வைரவர் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று இரவு நடைபெறும். (ஓ-31)

★ ★ ★

மட்டுவில் கிழக்கு வீரபத்திரர் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று வெள்ளி இரவு நடைபெறும். (ஓ-31)

★ ★ ★

எழுதுமட்டுவாள் வடக்கு கலியாணக்குளம் பிள்ளையார் தேவஸ்தான மணவாளக் கோல விழா இன்று காலை 6 மணி தொடக்கம் நடைபெறும். தொடர்ந்து 10 தினங்கள் விசேட பூசைகள் இடம்பெறும். (ஓ-31)

★ ★ ★

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்றுவரும் வருடாந்த மஹோற்சவத்தையொட்டி பாண்டியந் தாழ்வு ஆஞ்சநேயர் ஆலயத்தில் இன்று காலை 6 மணி முதல் அம்மனுக்கு திருவூஞ்சலும் விசேட அபிஷேக ஆராதனையும் இடம்பெறும். (ஓ)

## பாடசாலைகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 7

ஸ்கந்தவரோதயக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் திரு. ஆ. கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக உடற்கல்விப் பணிப்பாளர் [illegible] விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஐ-39)

## கணித, விஞ்ஞான தினம்

யாழ்ப்பாணம், ஜூலை. 7

''உதயன்'' ஆதரவில் கணித, விஞ்ஞான மூலவள நிலையம் நடத்தும் கணித, விஞ்ஞான தின நிகழ்ச்சிகள் கோப்பாயில் உள்ள நிலைய மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிமுதல் நடைபெறவுள்ளன.

வலயக் கல்விப்பணிப்பாளர்கள் திரு க. கந்தசாமி, திரு. இ சிவானந்தன் ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்குவார்.

தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரன் சிறப்புரை வழங்குவார்.

''உதயன்'' ஆதரவில் நடத்தப்பட்ட கணித விஞ்ஞான வினாடி-வினா போட்டியில் வெற்றியீட்டியோருக்கான வெற்றிக்கிண்ணங்கள், சான்றிதழ்கள் என்பன அங்கு வழங்கப்பட உள்ளன.

''உதயன்'' பத்திரிகை நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு ஈ. சரவணபவன் இந்தப் பரிசில்களை வழங்குவார். (ஐ)

## புலிகளின் குரல் வானொலியில்

### 07 – 07 – 1995 வெள்ளி இரவு

★ 8-02 — கலைமஞ்சரி அறிமுகம்: 'சாரணம் சஞ்சிகையின் மே, யூன் மாத இதழ் சிறுகதை: நிதர்சனா எழுதிய 'புதியபாதை' லவனி எழுதிய இக்கரையும் பச்சை நிறம்'

★ 8-25 — கணப்பொழுது போராளி ஜெயக்கொடி எழுதிய வீரவேங்கை சுஜாத்.

★ 8-30 — செய்திகள்

★ 8-40 — அரசியல் அரங்கம்

★ 8-50 — ஏர்முனை நிகழ்ச்சியில் 'பீடைநாசனிகளால் ஆபத்து' குறுநாடகம்

### 08 – 07 – 1995 சனி காலை

★ 7-02—மாவீர வணக்கம்

★ 7-15 — நீங்கள் கேட்டவை

★ 7-30 — செய்திகள்

★ 7 35 — பத்திரிகைச் செய்திகள் அதனைத் தொடர்ந்து

★ 8 00 மணிவரை நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

### வெள்ளி மாலை

★ 5-01 — சிந்தனைச் சிதறல்

★ 5-02 — எழுச்சிகீதம்

★ 5-10 — புதியவை

★ 5-15 — களநேரக் காவியங்கள்

★ 5-30 — மண்ணின்குரல்

★ 5-40 — நேயர் கடிதங்கள்

★ 5-45 — வெற்றிச்சுவடுகள்

★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்

★ 6-02 —நாடகம் 'பொம்பிளை பார்க்கப் போறம்' இறுதி அங்கம்

★ 6-15 — விளையாட்டுச் செய்திகள் விளையாட்டுச் செய்திகளைத் தொடர்ந்து எம் தெரிவு.

## தமிழ்த்திறன் போட்டி பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான தமிழ் மொழி, கலைத்திறன் போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மாவட்ட அமைப்புக் குழுத் தலைவர் திரு. நா. சுந்தரலிங்கம்விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஐ)

## மனிதம் உளநல இல்ல விடுதிகள்

யாழ்ப்பாணம் ஜூலை 7

நோயாளர் நலன்புரி சங்கத்தின் ''மனிதம்'' உளநல இல்ல விடுதிகளின் நிர்மாண வேலை ஆரம்ப நிகழ்வு இன்று வெள்ளி நண்பகல் மானிப்பாய்— காரைநகர் வீதியில் கட்டுடைச் சந்திக்குச் சமீபமாக உள்ள இடத்தில் நடைபெறும். (ஐ)

## போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 7

சாவகச்சேரி டச்வீதி ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலய 4 ஆவது ஸ்ரீ பழநி வேல் பவனியை ஒட்டி — தென்மராட்சிபிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மாணவர்களுக்கான பேச்சு,சமயஅறிவு, பண்ணிசை, கவிதைப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை முதல் நடைபெறும். (க-14)

## யாழ். சுகாதார...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளன.

ஸ்ரீலங்காவின் வடக்கு—கிழக்கில் நிலைமை அதிர்ச்சி தரும் முறையில் மோசமடைந்துள்ளது.

போரிடும் பிரிவுகளுக்கிடையில் பெரும் உயிர் இழப்புகள் ஏற்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன. சிவிலியன்கள் மீதான தாக்குதல்களும் அதிகரித்துள்ளன.

மண்டைதீவுக் காவலரண் மீதான ஜூன் 28 ஆம் திகதிய தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதலில் 110க்கு மேலானோர் இறந்தனர்.

இவர்களில் மூவர் சிவிலியன்கள்.

இத் தாக்குதல் வியப்புத் தரும் பல ராணுவத் தாக்குதல்களில் ஒரு நிகழ்வாகும்.

இவற்றைத் தொடர்ந்து சிவிலியன்களை நேரடியாகப் பாதிக்கும் வன்முறைச் செயல்கள் ஏற்பட்டன.

திருகோணமலையில் ஏப்ரல் 19 ஆம் திகதி இரண்டு ஸ்ரீலங்கா கடற்படைக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. இது மூன்று மாதகால யுத்த நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது.

ஏப்ரல் 28 ஆம், 29 ஆம் திகதிகளில் பலாலி தளத்துக்கு அண்மையில் ஸ்ரீலங்கா விமானப் படையின் இரண்டு போக்குவரத்து விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்ட போது 92 பேர் மரணம் அடைந்தனர்.

சில வாரங்களுக்குப் பின்னர் மே 26 ஆம் திகதி திருகோணமலைக்கு வடக்கே உள்ள மீனவக் கிராமம் ஒன்றில் 42 சிங்கள சிவிலியன்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இதேவேளை தலைநகர் கொழும்பிலும் தீவின் கிழக்குப் பகுதியிலும் கைது செய்யப்படுவோரின் எண்ணிக்கை பெரிதும் அதிகரித்துள்ளது.

ஏப்ரல் மாதம் முதல் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு நாடு பூராவிலும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்போரில் 300 க்கும் மேற்பட்டோரைச் சென்று பார்த்து அவர்களுடைய விவரங்களைப் பதிவு செய்துள்ளது.

### யாழ். ஆஸ்பத்திரி நிலைமை

மோசமடையும் நிலைமையால் மோதல் பிரதேசங்களில் மருத்துவ சேவையும் பாதிக்கப்பட்டுள்ளது. செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு மேற்கொண்ட சமீப காலஆய்வின்படி யாழ்ப்பாணத்தில் ஆயிரம் படுக்கைகளைக் கொண்ட போதனாவைத்திய சாலையில் ஒரேயொரு அனுபவம் உள்ள சத்திர சிகிச்சை நிபுணரே உள்ளார்.

இந்த வைத்தியசாலையின் சுகாதாரத்தைப் பேணும்சாதனங்கள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மன்னார் ஆகிய மாவட்டங்களில் சத்திர சிகிச்சை வசதிகள் கிடையாது.

திருகோணமலை அரசாங்க வைத்தியசாலையில் ஒரேயொரு சத்திரசிகிச்சை நிபுணரும் அரைநேரம் வேலை செய்யும் ஒரு மயக்க மருந்து மருத்துவரும்தான் உள்ளனர்.

மோதல்கள் மீண்டும் தொடங்கிய பின்னர் மருந்து வகைகள் மீதான தடை மீண்டும் விதிக்கப்பட்டுள்ளது.

மருந்துக் கையிருப்பு துரிதமாகக் குறைகின்றது. மிகவும் அவசரத் தேவைகளை சமாளிப்பதற்காக செஞ்சிலுவை சங்கசர்வ தேசக்குழு யாழ்ப்பாணத்தில் அதன் அவசர மருந்துக் கையிப்புகளை இரட்டிப்பாக்கத் தீர்மானித்துள்ளது. மேலதிக மருத்துவ ஊழியர்களையும் அனுப்ப திட்டமிடுகின்றது.

இருப்பினும் இப்பிராந்தியத்தின் சிவிலியன்கள் மென் மேலும் தனிமைப்படுவதை ஒட்டி அது மிகவும் கவலை கொண்டிருக்கிறது

அபாயகரமான பாதுகாப்பு நிலைமைகள் காரணமாக யாழ்ப்பாணத் தீபகற்பத்துக்கும் நாட்டின் இதர பகுதிகளுக்கும் இடையிலான மக்கள் நடமாட்டமும், பொருள்கள் விநியோகமும் மட்டுப்பட்டதாக உள்ளன.

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு அளிக்கும் பாதுகாப்புடன் அரசாங்கக் கப்பல்கள் கொழும்பிலிருந்து குடா நாட்டுக்குக் கொண்டுவரும் மருத்துவ, உணவுப் பொருள்கள் மற்றும் அடிப்படை அத்தியாவசியப் பொருள்களில் தான் யாழ்ப்பாணத்தின் சிவிலியன்கள் மென்மேலும் தங்கி உள்ளனர்.

ஜூன் மாதத்தின் ஆரம்பம் வரை செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு வாடகைக்கு அமர்த்திய கப்பல் ஒன்று நோயாளிகளையும் குடும்பங்களுடன் மீண்டும் ஒன்றிணைவோரையும் ஏற்றியிறக்கிக் கொண்டிருந்தது.

ஆனால் ஜூன் 4 ஆம் திகதி இந்தக் கப்பல் கண்ணிவெடி ஒன்றில் சிக்கி காங்கேசன் துறை துறைமுகத்தில் மூழ்கியது.

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழு இன்னொரு கப்பலைப் பெற்றுக்கொள்ள தற்பொழுது முயற்சிக்கிறது.

போரிடும் தரப்புகளிடமிருந்து புதிய பாதுகாப்பு உத்தரவாதங்களை அது நாடுகின்றது.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-ச)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பருத்தித்துறை
ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம
வெள்ளி விழாவையொட்டிய

## ஆடி மாத நிகழ்வுகள்

7. 7. 95 [வெள்ளி]
காலை 8-30 மணிக்கு — சர சாலை சரஸ்வதி வித்தியாலயத்துக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கல்.

8. 7. 95 [சனி]
காலை 9 மணிக்கு — வெள்ளிவிழா பேச்சுப் போட்டி.
இடம்:- இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்
பங்குபற்றும் கல்லூரிகள்:-
கொக்குவில் இந்து, தெல்லிப்பழை மகாஜனா, தெல்லிப்பழை யூனியன், இராமநாதன் மகளிர்.

10. 7. 95 (திங்கள்)
வடமராட்சி கிழக்கில் உள்ள பாடசாலைகளுக்கு மருந்து மற்றும் பால் மா வகைகள் விநியோகித்தல்.

12. 7. 95 (புதன்)
— குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இலவச மருத்துவ முகாம் — டாக்டர் எம். யோகச்சந்திரதேவன் தலைமையில்
(சிறுவர்கள், மாணவருக்கு முன்னுரிமை)
★ சேவாச்சிரமத்தில் குருபூர்ணிமாவும், மகேஸ்வர பூசையும்.

28. 7. 95 [வெள்ளி]
பி.ப. 3.30 மணிக்கு — மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகாவித்தியாலயத்தில் பகவத் கீதைப் பேருரை.
நிகழ்த்துபவர்:- சுவாமி சித்ரூபானந்தா

செயலாளர்
ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்
பருத்தித்துறை. (சி/1616)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி லொய்ஸா நேசரத்தினம் நல்லதம்பி

இவரது நல்லடக்க ஆராதனை நாளை (8-7-95) சனிக்கிழமை ஹாட்லிக் கல்லூரிக்கு அருகில் உள்ள அவரது இல்லத்தில் காலை 9-30மணிக்கு நடைபெற்று, பூதவுடல் சுட்டைவேலி மெதடிஸ்த சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். நண்பர்களும், உறவினரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செல்வி ஈடித் நல்லதம்பி
[மகள்]
15/3, கல்லூரி வீதி,
பருத்தித்துறை. (37371)

### கணபதிப்பிள்ளை சட்டநாதன்

(பிரபல மருந்துக்கடை உரிமையாளர்)

கணபதிப்பிள்ளை சட்டநாதன் அவர்கள் 5-7-95 புதன்கிழமை காலமானார்.

இவர் க. செ. கணபதிப்பிள்ளை & சன்ஸ் உரிமையாளரும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற அம்மாப்பிள்ளை ஆகியோரின் மூத்தமகனும், பொன்னம்மாவின் அன்புக்கணவரும் புனிதவதி, கமலாதேவி, (நோர்வே), ரேவதி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற கந்தையா, ஈஸ்வரியம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், சந்தானகோபால், தெய்வேந்திரம், (பாலமுருகன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்), குலநாயகியம்மா [அவுஸ்திரேலியா), தனபாக்கியலட்சுமி, நல்லைநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்வராசா, [அவுஸ்திரேலியா), கிருஷ்ணபிள்ளை (உதவி தபால் அதிபர், யாழ்ப்பாணம்], ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இவரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
க. நல்லைநாதன்
[சகோதரர்]
32, சட்டநாதர் றோட்,
நல்லூர். (37387)

### திருமதி இராமநாதர் சிவக்கொழுந்து

சின்னக்குளம், கந்தரோடையைச் சேர்ந்த திருமதி இராமநாதர் சிவக்கொழுந்து 06 - 07 - 95 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராமநாதரின் அன்பு மனைவியும், யோகேஸ்வரன், கமலகுமாரி [இராசாத்தி], குகநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சதாசிவம் [பளை], திருமதி யோகேஸ்வரி [சந்திரா - உதவி அதிபர் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை, மானிப்பாய்] ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று 07-07-95 நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
திருமதி சதாசிவம் [இராசாத்தி]
கந்தரோடை,
சுன்னாகம். [8810]

### நடராசா சண்முகலிங்கம்

(ஓய்வுபெற்ற லிகிதர், தபாலகம், யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி கேணியடியைப் பிறப்பிடமாகவும், சரந்தன் - நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த நடராசா சண்முகலிங்கம் நேற்று இரவு சிவபதமடைந்துவிட்டார்.

இவர் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெனகன் (ஜேர்மனி), சுரேன் (யாழ். இந்து - ஆண்டு 11 மாணவன்), அனுஷா (உடுவில் மகளிர் - ஆண்டு 10) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (7-7-95] வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி
[37393]


## பிற்போடப்பட்டுள்ளது

வட்டுக்கோட்டை விளையாட்டுக்கழக வளர்ச்சி நிதிக்காக நடத்தப்படும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுத் திகதி தவிர்க்கமுடியாத காரணத்தால் 03 - 09 - 1995 வரை (பிற்பகல் 3-00 மணிக்கு) பிற்போடப்பட்டுள்ளது.

(37380) — இயக்குநர்.

பல்கலைக் கழக மாணவரின்
வேண்டுகோளுக்கு இணங்கவும்
வேலைக்கு செல்கின்றவர்களின்
வேண்டுகோளுக்கு இணங்கவும்

## சிங்கள வகுப்புகள்

ஆரம்பம் 08-07-95

பயிற்றப்பட்ட சிங்கள ஆசிரியரினால்
கற்பிக்கப்படும் ஒரே நிறுவனம்

எஸ். ரி. கல்வி நிறுவனம்

46,3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்

பிரிவு I சனி ஞாயிறு 8. 30 — 9. 30 A. M
பிரிவு II 5. 00 — 6. 00 P. M

ஆசிரியர்:
E. S. பியதாச (37388)

திருமறைக் கலாமன்றம்
வழங்கும்

## ஏழு பிள்ளை நல்லதங்காள்

(இசை நாடகம்)

ஜூலை 8 (சனி) — தரை மட்டும்
ஜூலை 9 [ஞாயிறு] ஆசனம் உண்டு
திருமறைக் கலாமன்ற அரங்கில்
மாலை 6. 45 மணிக்கு

ஆசனப் பதிவினை முன்கூட்டியே அலுவலகத்தில் செய்து கொள்ளவும்.

திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். [சி/ 1614]

இலங்கை வங்கி
யாழ். மேற்தரக் கிளை

## பொன் விழா வைபவம்

அன்புடையீர்!

எமது வங்கியின் பொன்விழா வைபவ நிகழ்ச்சிகள் நாளை 08 - 07 - 95 சனிக்கிழமை பி.ப. 3-00 மணிக்கு வங்கி வளாகத்தில் நடைபெறும்.

இத்தருணம் வாடிக்கையாளர்கள், வங்கி ஓய்வூதியர்கள், நலன் விரும்பிகள், ஆதரவாளர்கள் அனைவரையும் இவ் வைபவத்தில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

பிரதம விருந்தினர்:
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
(கலைப்பீடாதிபதி யாழ். பல்கலைக்கழகம்]
திருமதி இராஜலட்சுமி பாலசுந்தரம்பிள்ளை

கௌரவ விருந்தினர்:
திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல்
(மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்]

★ நிகழ்ச்சி நிரல் ★

| | |
|---|---|
| பி. ப. 3-00 | மங்கள விளக்கேற்றல் |
| பி. ப. 3-10 | கடவுள் வணக்கம் |
| பி. ப. 3-15 | மௌன அஞ்சலி |
| பி. ப. 3-20 | இலங்கை வங்கி கீதம் |
| பி. ப. 3-25 | இலங்கை வங்கி யாழ். கிளைக்கீதம் |
| பி. ப. 3-30 | வரவேற்புரை [பிரதான முகாமையாளர்] |
| பி. ப. 3-40 | சிறப்புரை [உதவிப் பொது முகாமையாளர், வடமாகாணம்] |
| பி. ப. 3-50 | கௌரவ விருந்தினர் உரை |
| பி. ப. 4-00 | பிரதம விருந்தினர் உரை |
| பி. ப. 4-15 | யாழ். போதனா வைத்தியசாலைக்கான வைத்திய உபகரண அன்பளிப்பு வழங்கல். |
| பி. ப. 4-30 | 50ஆவது ஆண்டு நிறைவை ஒட்டிய விருது வழங்கல் [வாடிக்கையாளர், வங்கி ஓய்வூதியர், இளை ஊழியர்] |
| பி. ப. 5-30 | யாழ். இலங்கை வங்கி நலன்புரிக் கழகத்தினால் ஊனமுற்றோருக்கும், அனாதை சிறுவருக்குமான அன்பளிப்பு வழங்கல் |
| பி. ப. 5-45 | கலை நிகழ்ச்சி வில்லுப்பாட்டு: கலா. வினோதன் க. நா. கணபதிப்பிள்ளை (சின்னமணி) குழுவினர் |
| பி. ப. 7-15 | நன்றி நவிலல் |

இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

பிரதான முகாமையாளரும் சக ஊழியரும்
07-07-1995 (சி/1611)


### குறைபாடுகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வின் கொழும்பு அலுவலகத் தலைமை அதிகாரி திரு. மார்க்கோ அவுற்றாவை பி. பி. ஸி பேட்டி கண்டது.

சத்திர சிகிச்சை நிபுணர் தட்டுப்பாடு, மருந்துத் தட்டுப்பாடு, போதிய எரிபொருள் கிடைக்காமை ஆகிய கஷ்டங்களை திரு. மார்க்கோ தமது பேட்டியில் விளக்கமாக விவரித்தார்.

சுகாதார அமைச்சர் பி.பி ஸி. கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் — சத்திர சிகிச்சை நிபுணர் தட்டுப்பாடு இலங்கை முழுவதிலும் உள்ள ஆஸ்பத்திரிகளின் பொதுப் பிரச்சினையாக உள்ளது.

யாழ்ப்பாணத்துக்கு மருந்துகளை எடுத்துச் செல்வதற்குத் தடை விதிக்கப்படவில்லை.

விசேட மருந்துகளைச் சில வேளை செஞ்சிலுவைச் சங்கம் வழங்கக்கூடும்.

செஞ்சிலுவையினர் தெரிவிக்கும் யாழ். ஆஸ்பத்திரி தொடர்பான பற்றாக்குறைகள், வசதியீனங்கள் இந்த நிமிடம் வரை எனது கவனத்துக்குக் கொண்டுவரப்படவில்லை — என்று மேலும் கூறினார். (அ)

### யாழ். ஆஸ்பத்திரி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளியே தயார் நிலையில் நின்றதாக நேற்றைய "வீரகேசரி" செய்தி வெளியிட்டது.

யாழ்ப்பாணம், கண்டி, மட்டக்களப்பு பகுதியில் இருந்து வந்த டாக்டர்கள் அச்சமயம் பரீட்சை எழுதிக் கொண்டிருந்ததாகவும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கைதான இரு டாக்டர்களும் கொழும்பு நீதிமன்றம் ஒன்றில் ஆஜர் செய்யப்பட்டதாகவும்—

அவர்கள் இன்று விடுவிக்கப்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-15)

### ராணுவ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணை நடத்துவர்.

மண்டைதீவுத் தாக்குதலில் 105 படையினரும் 4 சிவிலியன்களும் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் —

நான்கு படையினரை புலிகள் பிடித்துச் சென்றதாகப் பின்னர் தெரிய வந்தது என்றும்— ராணுவ அதிகாரிகள் தெரிவிப்பதாக 'ஐலண்ட்' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. (இ)

### மணலாறு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அன்சர் (கிருஷ்ணபிள்ளை சிவகுமார் - மட்டக்களப்பு), லெப்டினன்ட் தாயவன் (அருளானந்தன் வதனராஜ் - மயிலிட்டி), 2 ஆம் லெப்டினன்ட் வேணுசங்கர் (சுப்பிரமணியம் இராமகிருஷ்ணன் - தெல்லிப்பழை), வீரவேங்கை ஈழமணி (செல்வம் நந்தன் - நீர்வேலி), வீரவேங்கை குட்டிமணி (துரைராசா திருக்கணேசன் - காரைநகர்), வீரவேங்கை தயானந்தன் (தங்கராசா பாக்கியநாதன் - கரவெட்டி), வீரவேங்கை பூங்கண்ணன் (நவரட்ணம் கிறிஸ்துராஜா - புதுக்குடியிருப்பு). [ஓ-எ-4]

### என்ன...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

★ ஈழத் தமிழருக்கு எதிராக — சிங்களப் பேரினவாத அரசுக்கு எந்த வடிவத்திலும் உதவுவதற்கு இந்திய அரசு முயற்சித்தால் தமிழக மக்கள் சக்தியைத் திரட்டி அதைக் கடுமையாக எதிர்ப்போம்.

★ ஈழத் தமிழருக்கு கேடு செய்யும் நோக்கில் அமெரிக்க ஏகாதிபத்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

★ பல நாடுகளிலும் தஞ்சம் புகுந்துள்ள ஈழத்தமிழரை இலங்கைக்கு கட்டாயப்படுத்தி திருப்பி அனுப்பச் செய்வதற்கு சிங்கள அரசு நயவஞ்சகப் பிரசாரம் செய்கிறது. பிறநாடுகள் இதற்கு உடன்படக்கூடாது. உலகெங்கும் உள்ள தமிழர் இதற்காகப் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும்.

மொழியால் — இனத்தால் — பாரம்பரியத்தால் — பண்பாட்டால் — நாகரிகத்தால் — காலசாரத்தால் ஆயிரமாயிரம் ஆண்டுகள் இங்குள்ள தமிழரோடு உறவு கொண்டுள்ள ஈழத்தமிழரைப் பாதுகாப்பதற்கு நாம் எத்தகைய தியாகத்துக்கும் தயார்.

ஈழத் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினைக்கு தனித் தமிழீழமே தீர்வாகும். அவர்கள் போராட்டத்தை ஆதரிக்க வேண்டியது உலகத் தமிழர் அனைவரதும் கடமையாகும்— என்றார். (உ-4)

# ஜிந்துப்பிட்டியில் தமிழர் மீது கிரனேட் வீசிக் கொலை!

கொழும்பு ஜிந்துப்பிட்டிப் பகுதியில் கடந்த செவ்வாயன்று தமிழர் ஒருவர் கிரனேட் வீசிக் கொலை செய்யப்பட்டார்.

கனகு என்று அழைக்கப்படும் சுப்பிரமணியம் கனகரட்ணம் (வயது 41) என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டார்.

தனது காரை நிறுத்தி விட்டு ஒருவருடன் பேசிக் கொண்டிருந்த சமயம் அங்கு வந்த கோஷ்டி ஒன்று அவர் மீது கிரனேட் வீசிக் கொன்றது.

இச்சம்பவத்தில் இவருடன் நின்ற மற்றும் சிலரும் குண்டு வெடிப்பில் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தை அடுத்து ஜிந்துப்பிட்டி பகுதியில் பொலீஸார் சோதனை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தினர். வாகனப் போக்குவரத்தும் தடை செய்யப்பட்டது.

"கனகு முதலாளி" என்று அழைக்கப்படும் கனகரட்ணம் புறக்கோட்டைப் பகுதி பாதாள உலக கோஷ்டிகளின் தலைவர் என்றும் —

பாதாள உலக எதிரணியினராலேயே இவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் — என்றும் சொல்லப்படுகிறது.

கனகு முதலாளி கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவரது ஆதரவாளர்கள், எதிரணியினர் எனக் கருதப்படுவோரின் புறக்கோட்டையில் உள்ள பல கடைகளை அடித்து நொறுக்கினர்.

இதனால் சம்பவம் நடந்த திங்கட்கிழமையும் அடுத்த நாளும் புறக்கோட்டையில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

### ஒன்றுகூடல்

திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலய உயர்தர மாணவர் ஒன்றுகூடல் வைபவம் இன்று காலை 9.00 மணிக்கு பாடசாலையின் சுப்பிரமணிய மண்டபத்தில் நடைபெறும். நல்லூர் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (உ)

### தமிழர் கைது

மட்டக்களப்பு கலாவலப் பகுதியில் நேற்று இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு ஒன்றின் போது அப்பாவித் தமிழர்கள் 9 பேர் கைது செய்யப்பட்டனர் என அறிவிக்கப்படுகிறது. (ஓ-4)

### அளவ்வ...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

என்று கருத்து தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் விசாரணைக்காகக் கூட்டிச் செல்லப்பட்ட தமிழர்களே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று பலத்த சந்தேகம் தெரிவிக்கப்பட்டு வந்தது.

அதனை ஊர்ஜிதப்படுத்தும் வகையில் அச்சடலங்களில் அடையாளம் காணப்பட்ட முதலாவது சடலம் தமிழர் ஒருவரினுடையதாக உள்ளது.

நரேஷ் இராசதுரை என்ற இந்த இளைஞர் ஒரு மாதத்துக்கு முன் தாம் பணிபுரியும் வீடியோ கடையிலிருந்து வீட்டுக்குத் திரும்பும் போது வழியில் காணாமல் போனார் என்றும் —

அவர் காணாமற் போனது பற்றிய தகவலைத் தெரிவித்து அவரைக் கண்டு பிடிக்க உதவும்படி கோரி அப்போது பத்திரிகையில் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டது என்றும் —

மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-6)

### 4 நவீன ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாக்குதற் கடற்கலங்கள் இரண்டையும் அந்நாடு ஸ்ரீலங்காவிற்கு அன்பளிப்பாக வழங்கியிருந்தது. ஆனால் இம்முறை வழங்கப்படும் தாக்குதல் கடற்படைக் கலங்கள் நீண்டகால கடன் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

தற்போது கிடைக்கவுள்ள கடற்படைக்கலங்கள் மிக நவீனமானவையும் பெறுமதி கூடியவையுமென கடற்படை வட்டாரங்கள் தெரிவித்ததாக "லங்காதீப" மேலும் குறிப்பிட்டது. [உ-10]


## மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்

கொக்குவில் மேற்கு, கொக்குவில்

## குருக்கள் தேவை

மேற்படி ஆலயத்திற்கு நித்திய பூசை செய்வதற்கு சைவ ஆகம அனுட்டானங்கள் அனைத்தும் அறிந்த குருக்கள் ஒருவர் தேவை.

வேதனம் மற்றும் விடயங்களை நேரில் பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம். விண்ணப்பங்களை, அனுபவச் சான்றிதழ்கள், நன்சான்றிதழ்கள் என்பவற்றுடன் 27-7-95க்கு பிந்தாமல் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

ஆலய சேவையில்
கௌரவ செயலாளர்,
நிர்வாக சபை
மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (37392]

யாழ்ப்பாண மாவட்டப் பள்ளிகளுக்கிடையிலான
தமிழ்மொழி, கலைதிறன் போட்டிகள்
1995

## பரிசளிப்பு விழா

இடம்: யா / யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
காலம்: இன்று [07 - 07 - 1995]
வெள்ளி பிற்பகல் 2 00 மணி

தலைமை:
திரு. நா. சுந்தரலிங்கம்
(தலைவர், மாவட்ட அமைப்புக்குழு)

முதன்மை விருந்தினர்:
திரு. சு. ப. தமிழ்ச்செல்வன்
(பொறுப்பாளர், அரசியற்றுறை, தமிழீழம்)

தேசிய கொடியேற்றல்:
திரு. அ. அமுதன்
(தமிழீழக் கல்விக் கழகம்)

கொடி வணக்கப் பண்:
ஊர்காவற்றுறைக் கொத்தணி மாணவர்

மங்கள விளக்கேற்றல்:
திரு. க. கந்தசாமி
(கல்விப் பணிப்பாளர் வலயம் - 2)
திரு. இ. சிவானந்தன்
(கல்விப் பணிப்பாளர், வலயம் - 1)
திரு. அ. பஞ்சலிங்கம்
(அதிபர், யாழ். இந்துக் கல்லூரி)
அருட்திரு பிரான்சிஸ் ஜோசப் அடிகளார்
(தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை)

தமிழ்த்தாய் வாழ்த்து:
யா / யாழ். இந்துக் கல்லூரி

யாழ். மாவட்டத்தில் முதலிடம் பெற்ற நிகழ்ச்சிகளில் பத்து நிகழ்ச்சிகள் மேடையேற்றப்படுகின்றன.

யாழ். மாவட்ட அமைப்புக்குழு
(சி/1617)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 07 - 07 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org